செய்தி வெளியீடு எண்:652 நாள் : 9.12.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர்,காஞ்சிபுரம், கடலூர் மாவட்டங்களில் உள்ள கால்நடைகள் மற்றும் திருவண்ணாமலை,விருதுநகர்,அரியலூர்,கிருஷ்ணகிரி,வேலூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் மாவட்ட கால்நடைகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மாவட்டங்களில் 4768 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 96,505 மாடுகள், 2,04,339 ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1,51,728 மாடுகள் மற்றும் 2,82,221 ஆடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 6,45,044 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

கடலூர்,காஞ்சிபுரம்,விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கு 442.496 மெட்ரிக் டன் பசுந்தழைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று 40.841 டன் தாது உப்புக் கலவை கால்நடைகளுக்கு வழங்க விநியோகிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**